பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 17 புதன்கிழமை 30.03.2022 கதிர் 14

## பால் வண்டி மோதி ஒருவர் பரிதாபப் பலி

பதுளையில் பால் கொள்கலன் ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பதுளை, கெப்பட்டிபொலயில் இருந்து பொரலந்த நோக்கி வந்துகொண்டிருந்த பால் கொள்கலன், பொரலந்த பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த

2

# ராஜபக்ஷக்கள் பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை; பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்



## அமைச்சர் சமல் ஆலோசனை

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவோ பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்.

- இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னால் இன்னும் கிராமத்துக்குச் செல்ல முடிகின்ற போதிலும் மக்கள் வரிசையில் நிற்பதைக் கண்டு நான் வருத்தமடைகின்றேன்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசிலுள்ள எவரும் பதவி விலகுவதில் அர்த்தம் இல்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே மிகவும் அவசியம்.

அரசிடம்நிதியைக்கடுமையாகக்கையளிப்பதை எண்ணெய் மற்றும் எரிவாயு வரிசையில் நிற்கும் மக்கள் நன்கு

2

## நெருக்கடியைச் சமாளிக்க நாட்டை முற்றாக முடக்குக!

### கோட்டா அரசிடம் யோசனை



நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக, சில நாள்களேனும் நாட்டை முழுமையாக முடக்குமாறு கோட்டாபய அரசிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, மின்வெட்டு காரணமாக வர்த்தக நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல தொழில்

2

# நாளாந்த மின் தடை இனி 15 மணிநேரம்

## மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை

**நாட்டில் தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைமை மற்றும் வரட்சியான காலநிலை என்பன காரணமாக, நாளாந்த மின் தடை 15 மணித்தியாலங்கள் வரை நீடிக்கக்கூடும் என மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**சிலநேரம், எதிர்காலத்தில், மின்துண்டிப்பு நேர அட்டவணைக்குப் பதிலாக, மின்விநியோக நேர அட்டவணையை வெளியிடுவது இலகுவானதாக இருக்கும் என்று கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில், அந்தச் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்தார்.**



2

## புத்தூரில் கடத்தப்பட்ட இளைஞர் கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்பு

யாழ்., புத்தூர் மேற்கு, நவக்கிரி பகுதியில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட இளைஞர் கைகள் கட்டடப்பட்ட நிலையில் அவரது வீட்டுக்கு அருகில் மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவக்கிரி சனசமூக நிலையத்தடியில் நேற்று மாலை மீட்கப்பட்ட குறித்த இளைஞர் சிகிச்சைக்காக அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த அருந்த வராசா சயந்தன் (வயது 30) எனும்

2



## மே தினத்திலும் அரசுக்குப் பேரிடி

### 11 பங்காளிக் கட்சிகள் தனிவழி

ராஜபக்ஷ அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மே தினக் கூட்டத்தைத் தனியாக நடத்துவதற்கு அரச பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமலின் கட்சி, உதய கம்மன்பிலவின்

2

# யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளையும் சீனாவிடமிருந்து பிடுங்கியது இந்தியா

யாழ்ப்பாணத்தின் 3 தீவுகளில் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தி தொடர்பில் இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தத் தீவுகளில் சீன அரசின் உதவியுடன் அந்த நாட்டு நிறுவனம் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தி மேற்கொள்வதற்கு இலங்கை அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இந்தியா தனது பாதுகாப்பை முன்னிறுத்தி இராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்தநிலையில் இலங்கைக்கான ஒரு

2



## இ.தொ.கா. புதிய தலைவராக செந்தில் தொண்டமான் தெரிவு



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவராகச் செந்தில் தொண்டமான் தெரிவுசெய்யப்பட்டார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் வெற்றிடமாக இருந்த இ.தொ.கா வின் தலைமைப் பதவிக்கே செந்தில் தொண்டமான் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

2

## நாளாந்த மின் தடை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வரையில், நீர் மின் உற்பத்தியில், சுமார் 1,200 மெகாவாட் மின்சாரத்தை வழங்கக்கூடிய இயலுமை இருக்கின்ற போதிலும், நீர் இன்மையால், மதிய நேரத்தில் 300 மெகாவாட் மின்சாரத்தையும், இரவு நேரத்தில் 700 மெகாவாட் மின்சாரத்தையும் மாத்திரமே வழங்கமுடியும்.

அதேநேரம், எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களில், 1, 700 மெகாட் அளவில் கொள்ளளவு இருக்கின்றபோதிலும், எரிபொருள் இன்மையால், 1,000 மெகாவாட் மின்சாரத்தை மாத்திரமே வழங்க முடியும்.

ஆனால், இரவு நேரத்தில் மாத்திரம் 1, 800 மெகாவாட் மின்சாரத்துக்கான கேள்வி உள்ளது.

எனவே, விநியோகத்தில் நிச்சயமாக வீழ்ச்சி உள்ளது. தற்போது வரையில், பாஜ் மின்னுற்பத்தி நிலையத்துக்கும் களனிதிஸ்ஸ கூட்டு மின்னுற்பத்தி நிலையத்துக்கும் 1,500 மெட்ரிக் டன் எரிபொருள் மாத்திரமே கிடைத்துள்ளது.

எரிபொருளில் இயங்கும் வேறு எந்தவொரு மின்னுற்பத்தி நிலையத்துக்கும் எரிபொருள் கிடைக்கவில்லை.

நாங்கள் அறிந்த வகையில், இன்றும் நாளையும் எரிபொருள் கிடைக்காது.

இன்று 10 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்படும்.

இந்தநிலையில், எதிர்வரும் நாள்களில் மின் துண்டிப்பு நேரத்தை 12 மணித்தியாலங்களாகவும், 15 மணித்தியாலங்களாகவும் அதிகரிக்க வேண்டி ஏற்படக்கூடும்.

எனவே, மின்சாரம் விநியோகிக்கப்படும் நேரத்தைக் கூறுவது சிறந்ததாகும்.

விரைவாக எரிபொருளைப் பெற்றுக் கொடுத்தால், மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தை இயன்றளவு குறைக்க முடியும் என அரசுக்கு அறியப்படுத்தியுள்ளோம். - என்றார்.

## புத்தூரில் கடத்தப்பட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் கடந்த சனிக்கிழமை இரவு மின்சாரம் தடைப்பட்டு இருந்த வேளை இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார் என அவரது உறவினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

வீட்டு வளாகத்தில் இருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும், வெளியே சென்ற இளைஞரை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தனர்.

அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தேடியபோது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது.

அதேநேரம், கடந்த 12ஆம் திகதி இளைஞரின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்குள்ளான இளைஞரின் தந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இருவர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இளைஞர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தநிலையில், இரண்டு நாள்களின் பின்னர் கடத்தப்பட்ட இளைஞர் கைகள் கட்டப்பட்ட நிலையில் நவக்கிரி சனசமூக நிலையத்துக்கு அண்மையில் நேற்று மாலை மீட்கப்பட்டார்

அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இளைஞனிடம், சிகிச்சையின் பின்னர் வாக்குமூலம் பெறப்படும் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணத்தின் மூன்று ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கலின்போது இந்தியா பல நிபந்தனைகளை விதித்திருந்தது. அதில் வடக்கு, கிழக்கில் இந்திய முதலீட்டுக்கு அனுமதிக்கக் கோரியிருந்தது.

இதற்கு அமைவாக யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளிலும் மின் உற்பத்திக்கான ஒப்பந்தம் இந்தியாவுடன் நேற்றுமுன்தினம் இரவு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சி, நமது அபிவிருத்தி பங்குடைமை, பரஸ்பர பாதுகாப்பு, மீனவர்கள் விவகாரம் மற்றும் சர்வதேச ரீதியிலான ஒன்றிணைவு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அத்துடன் முக்கியமான பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட நிகழ்வுகளிலும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடனான சந்திப்பின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

## இ.தொ.கா. புதிய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் இன்று இ.தொ.காவின் தேசிய சபை கூடியபோதே செந்தில் தொண்டமான் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## மே தினத்திலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உட்பட 11 கட்சிகள் இணைந்து , அரசுக்கு எதிராக கொழும்பில் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நேற்றிரவு நடைபெற்ற விசேட கூட்டமொன்றின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டள்ளது.

## ராஜபக்ஷக்கள் பதவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்திருந்த போதிலும் அதற்கு அரசு வழங்கும் பதில்கள் போதுமானதாக இல்லை.

எனவே, அரசிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் - என்றார்.

## பால் வண்டி மோதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து வக்கி கும்புரா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த 23 வயதுடைய இளைஞர் இந்த விபத்தில் பலத்த காயமடைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பால் கொள்கலன் சாரதி போககும்பரா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை போககும்புரா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நெருக்கடியைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், சில நாள்களேனும் நாட்டை முழுமையாக மூடிவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு உயர் மட்டங்களில் இருந்து அரசிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம்- 076 443 8622









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இருள் சூழும் காலம்

"அடுத்த சில நாள்கள் பொது மக்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும்" – என்று தெரிவித்திருக்கின்றார் பொதுப் பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க.

நுகர்வோருக்கு – பொது மக்களுக்கு – பொதுச் சேவைகள் தங்கு தடையின்றி உரிய முறையில் கிட்டுவதை உறுதிப்படுத்த வேண்டிய ஆணைக்குழுவே அது தொடர்பில் தனது இயலாமையை கைவிரித்துக் காட்டிவிட்டது.

அதில் வேடிக்கை என்னவென்றால் பொதுமக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், கஷ்டங்கள் அடுத்த சில நாள்களுக்கு மேலும் மோசம் அடையும் என்று குறிப்பால் உணர்த்தியுள்ள ஆணைக்குழுவினால் அந்த நிலைமை எப்போது சீரடையும் என்பதை குறிப்பிட முடியவில்லை. அதுதான் உண்மை நிலைவரம். அடுத்த சில நாள்கள் என்பது அடுத்த சில வாரங்கள், அடுத்த சில மாதங்கள் கடந்து அடுத்த சில வருடங்களாகவும் மாறக்கூடும்.

பொதுச் சேவைகள் தங்கு தடை இன்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய நோக்கத்துக்காக நிறுவப்பட்ட பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தினசரி இவ்வளவு நேரம் மின்வெட்டுக்கு அனுமதித்தல் என்ற கேவலப் பணிக்குப் பொறுப்பாகி மாதங்கள் கடந்து விட்டன.

நெருக்கடி நிலைமை தீரும் வரையான தற்காலிக ஏற்பாடு என்ற பெயரில் தொடக்கத்தில் இரண்டு மணி நேரம் என ஆரம்பித்த மின்வெட்டு இப்போது நாளில் நாற்பது வீதத்துக்கும் அதிக நேரத்துக்கு – தினசரி 10 மணி நேரத்துக்கு – என நீடிக்கப்பட்டு விட்டது. தினசரி எப்போதாவது மின்விநியோகம் என்ற நிலைமைக்கு விவகாரம் மோசமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

"நிலைமை மேலும் மேலும் மோசமாகி வருகின்றது. இவற்றிற்கு தீர்வு காண எந்த நிறுவனமும் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை. நிதி நெருக்கடியால் மின்வெட்டு நெருக்கடி ஏற்பட்டுள்ளது" – என்று தன் இயலாமையை வெளிப்படையாக ஒப்புதல் வாக்குமூலமாக அறிவித்துவிட்டது ஆணைக்குழு.

"அரசு ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் இந்த சூழ்நிலையை நிர்வகிக்க நாங்கள் அரசாங்கத்துக்கு பரிந்துரைத்தோம்" என்று கூறும் ஆணைக்குழு, ஆனாலும், அந்தப் பரிந்துரை வழமை போல 'செவிடன் காதில் ஊதிய சங்காக' அரசின் காதுகளில் விழவில்லை என்றோ அல்லது விழுந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றோ உண்மையை தெளிவுபடுத்தத் தவறிவிட்டது.

நாளில் 10 மணி நேரம் – அதிலும் சுமார் ஆறு மணி நேரம் பகலில் – மின்வெட்டுக்கு அனுமதி அளித்துவிட்டு வீட்டிலிருந்து வேலை செய்யுங்கள் என்றால் அது சாத்தியப்படக்கூடிய விடயமா? மின்சாரம் இல்லாமல் வீட்டில் இருந்தும் வேலை செய்ய முடியாது; அலுவலகத்திலிருந்தும் வேலை செய்ய முடியாது. இந்தச் சீத்துவத்தில் பாடசாலை வேலை நேரத்தை மேலும் ஒரு மணி நேரம் நீடிக்கும் திட்டம் வேறு.

அந்நிய செலாவணியை ஓரளவுக்கு ஈட்டி தரும் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு மின்சாரம் வழங்க எங்களால் முடிந்தவரை முயற்சி செய்கின்றோம் என்று ஆணைக்குழு கூறுகின்றது.

ஆனால் தினசரி பத்து மணி நேர மின்வெட்டால் மக்களின் வழமையான வாழ்வியல் நிலைமை மோசமாகப் பாதிக்கப்படுவதைத் தாண்டி, சுற்றுலா, பொருள் உற்பத்தி துறைகள் அனைத்துமே அடியோடு படுக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் நாட்டின் இருண்ட யுகம் மீளவும் ஆரம்பித்து விட்டது என்பதை இந்த மின்வெட்டும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

# வரிசையில் நின்றபோதும் ஹற்றனில் டீசல் இல்லை!

## கொதித்தெழுந்த மக்கள்

ஹற்றன் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் டீசல் தீர்ந்து போனதால் வாகன சாரதிகள் ஹற்றன் மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பொது போக்குவரத்து சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் தடைப்பட்டது.

ஹற்றன் நகரத்தில் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் பெற்றுக்கொள்வதற்காக வாகன சாரதிகள் நேற்று பகல் முதல் வரிசையில் காத்திருந்தனர்.

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து டீசல் முடிவடைந்ததாக அறிவித்ததைத் தொடர்ந்து ஹற்றன் கொழும்பு பிரதான வீதியை ஹற்றன் மணிக்கூண்டு கோபுரத்துக்கு முன்னால் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை 7.45 மணியளவில் மறித்து சுமார் 8.15 வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டகாரர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

நேற்று (செவ்வாய்க்கிழமை) பகல் முதல் டீசல் பெற்றுக்கொள்வதற்காக உணவின்றி நின்று கொண்டிருக்கிறோம் எனவும் தற்போது டீசல் இல்லையெனத் தெரிவிக்கிறோம் எனவும் நாளை (இன்று) டீசல் பெற்றுக்கொள்ள வந்தால் மீண்டும் ஆரம்பத்திலிருந்து வரிசையில் நிற்க வேண்டியிருப்பதாகவும் அரச பஸ்களுக்கு மாத்திரம் டீசலை பெற்றுக் கொடுக்கின்றனர் எனவும் ஏனையவர்கள் எவ்வாறு வாழ்வது எனவே டீசல் பெற்றுக் கொடுக்கும் வரை தாங்கள் வீதியை மறித்து போராடுகிறோம் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மற்றுமொருவர் கருத்துத் தெரிவிக்கையில் –

செல்வந்தர்களுக்கு அதிக விலைக்கு விற்பதற்காக டீசலை வைத்து கொள்கின்றனர் எனவும் இதனால் ஏழை மக்கள் மாத்திரம் பாதிப்புக்குள்ளாகின்றனர் எனவும் தெரிவித்தார்.

மேற்படி போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்றது. இதனால் பயணிகள் மற்றும் வீடுகளுக்குச் செல்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அதனை தொடர்ந்து ஹற்றன் பொலிஸார் கொட்டகலை எரிபொருள் விநியோகிக்கும் பெற்றோல் கூட்டுத்தாபனத்துடன் பேசி இன்று டீசல் பெற்றுக்கொடுக்கிறோம் என உறுதியளித்ததனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

# பிணைமுறி ஏலங்கள் அனைத்தும் நிராகரிப்பு

நேற்று (செவ்வாய்க்கிழமை) அழைக்கப்பட்ட அனைத்து பிணைமுறி ஏலத்திற்கான கிடைக்கப்பட்ட அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டு முதிர்ந்த காலங்களின் மொத்தம் 4 ஆயிரத்து 500 கோடி ரூபா பெறுமதியான பத்திரங்கள் ஏலத்தில் விடப்பட்டன.

இதன்போது மார்ச் 15, 2025 அன்று காலாவதியாகும் 10.25% ஆண்டு வட்டி விகிதத்தின் கீழ் ரூ. 2 ஆயிரத்து 500 கோடி ரூபா பிணை முறி மற்றும் மே மாதம் 15, 2029 அன்று காலாவதியாகும் ரூ. 2 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள பிணை முறிகள் ஏலத்தில் விடப்பட்டன.

இதற்காக முறையே 2.9092 கோடி ரூபா மற்றும் 2.9855 கோடி ரூபாவுக்கான ஏலம் கோரப்பட்டிருந்ததாக இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சவுதி அபிவிருத்தி நிதியம் இலங்கைக்கு உதவுமாம்!

இலங்கைக்கான சவுதி அபிவிருத்தி நிதியத்தின் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க உத்தேசித்துள்ளதாக இலங்கைக்கான சவுதி தூதுவர் அப்துல் நாசர் ஹுசைன் அல் ஹார்திஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். தனது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு இந்நாட்டில் இருந்து வெளியேறிச் செல்லும் அப்துல் நாசர் நேற்று (செவ்வாய்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியை சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஹுசைன் அல் ஹார்தியின் பதவிக்காலத்தில் அவர் வழங்கிய ஒத்துழைப்பிற்காக ஜனாதிபதி அவரைப் பாராட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் முதலீடு மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாகவும் ஆராய்வதற்காக சவுதி அரேபிய உயர்மட்டக் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஹார்தி தெரிவித்துள்ளார்.

முதலீட்டு வலயங்களுடன் தொடர்புடைய பல சிறப்பு வரிச் சலுகைகள் உள்ளன. மருந்து, தொழிநுட்பம் மற்றும் ஆடைத் தொழில் துறைகளில் நேரடி முதலீட்டிற்கான பரந்த வாய்ப்புகள் இலங்கையில் இருக்கின்றன என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு துறைமுக நகர் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேச கப்பல் பழுது பார்ப்பு மற்றும் உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடைய முதலீட்டு வாய்ப்புகளில் முதலீடு செய்யுமாறு சவுதி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, சவுதி அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இந்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு வழங்கிய உதவிக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.



# ஏமனில் அமைதி நிலவுவதற்காக தற்காலிக போர் நிறுத்தம் அறிவிப்பு

ஏமனில் சவுதி கூட்டுப் படைகள் தற்காலிகமாக போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளன. இதுகுறித்து அரபு செய்தி நிறுவனங்கள், இஸ்லாமியர்களின் புனித மாத மான ரமலான் மாதத்தில் அரசியல் பேச்சுக்களுக்கு வளமான சூழலை உருவாக்கவும், அமைதிக்கான முயற்சிகளைத் தொடங்கவும் ஏமனில் தற்காலிக போர் நிறுத் தத்தை சவுதி கூட்டுப் படைகள் அறி வித்துள்ளன. இந்தப் போர் நிறுத்தம் ஏமனில் அமைதி நிலவுவதற்காக அரசியல்ரீதியான பேச்சை ஊக்கு விக்கும் என்றும் சவுதி கூட்டுப் படைகள் தெரிவித்துள்ளன. இந்தப் போர் நிறுத்தம் இன்று காலை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியிட்டுள்ளன.

சவுதி கூட்டுப் படைகளின் இந்த முடிவை ஐ.நா. வரவேற்றுள்ளது ஆனால் சவுதியின் இந்த முடிவை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் ஏற்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏமனின் உள் நாட்டுப் போர் கடந்த வாரம் தான் 8ஆம் ஆண்டுக்குள் நுழைந்தி ருக்கிறது. தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக் கும்,ஷியாபிரிவைச்சேர்ந்தஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்நாட்டுப் போர் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து மன்சூர் ஹைதி தனது பதவியை ராஜினாமா செய்தார். தற்போது ஏமனின் அதி பராக அலி அப்துல்லா சாலே இருக்கிறார். 7 வருடங்களாக நடக் கும் இந்த உள்நாட்டுப் போரில் ஏமன்ன் அரசுக்கு ஆதரவாக சவுதி அரேபியா அரசு செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. 7 வருடங்களாக நடக்கும் ஏமன் உள்நாட்டுப் போரில் இதுவரை 1 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் லட்சக்கணக்கான மக்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாகச் சென் றுள்ளனர்.

# பாகிஸ்தானில் பெரும்பான்மையை இழந்தது இம்ரான்கான் அரசு



பாகிஸ்தானில் இம்ரான்கான் அரசுக்கு அளித்த ஆதரவை MQM கட்சி விலக்கிக்கொண்டது. எதிர்க் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு ஆதரவு அளிப் பதாக MQM கட்சி அறிவித்துள்ளது. பெரும்பான் மையை நிரூபிக்க 172 இடங்கள் தேவை என்ற நிலையில் ஆளுங்கட்சியின் பலம் 164 ஆக குறைந்தது. MQM கட்சி அறிவிப்பால் எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக உயர்ந்துள்ளது.

## ஆப்கானிஸ்தானில் அரசுப் பணியாளர்கள் தாடி வளர்ப்பது கட்டாயம் என்கிறது தலிபான்



ஆப்கானிஸ்தானில் அரசுப் பணியாளர்கள் தாடி வளர்ப்பது கட்டாயம் என தலிபான் அரசு உத்தரவிட் டுள்ளது. மேலும் அரசுப் பணியாளர்கள் தலைப்பாகை உள்ளிட்ட பாரம்பரிய உடைகளை மட்டுமே அணிய வேண்டும் என அறிவித்துள்ளது.

### உக்ரைன் நாட்டிலிருந்து

# ரஷ்யப் படைகள் பின்வாங்கவில்லை நிலைப்பாட்டை கண்காணிக்கும் அமெ



உக்ரைனில் படைகளின் எண் ணிக்கை குறைத்து கொள்ளப்படும் என்று ரஷ்யா அறிவித்துள்ள நிலையில், ரஷ்யாவின் உண்மையான நிலைப் பாட்டினை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது. செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன்,அமெ ரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு அளித்து வரும் வலுவான பொருளாதாரம் மற்றும் மனிதாபிமான உதவிகள் தொடரும் என்று கூறினார். உக்ரைனில் தன்னுடைய ராணுவ நடவடிக்கைகளை வாக்குறுதி அளித்தபடி ரஷ்யா குறைத்துக்கொள்ளுமா என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண் டும் என்று ஜோ பைடன் தெரிவித்தார்.

உக்ரைன் ரஷ்யா இடையேயான பேச்சு சாதகமான நிலையை எட்டி இருப்பது புதிய நம்பிக் கையை அளிப்பதாக கூறிய ஜோ பைடன், ரஷ்யாவின் நிலைப்பாட்டினை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்றார். உக்ரைனில் தற்போது இருக்கும்சூழலைதொடர்ந்து கண்காணித்து வருகிறோம் எனவும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்து உள்ளார். இந்த நிலையில் உக்ரைன் தலைநகர் கீவ்வில் இருந்து ரஷ்ய படைகள் திரும்பப் பெறப்பட வில்லை என்றும் வேறு இடத்திற்கு ம ட்டுமே மாற்றப்படுகிறது என்றும் அமெ ரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் கூறியுள்ளது.

இதுகுறித்து பேட்டி அளித்த பென்டகன் அதிகாரி ஜான் கிர்பி, 'ரஷ்ய படைகள் பின்வாங்கவில்லை. வேறு முன்களத் திற்கு மாற்றப்படுகின்றன. உக்ரைன் தலைநகர் கீவ் தாக்கப்படும் அபாயம் தொடர்கிறது.கீவில் உள்ள ரஷ்ய வீரர் களில் சிறிய எண்ணிக்கையிலானோர் மட்டுமே இடமாற்றம் செய்யப்பட்டுள்ள னர். உக்ரைனில் இதர நகரங்கள் மீது தாக்குதலை ரஷ்யா மேற்கொள்வதை காண தயாராகுவோம்,'என்றார்.



# உக்ரைன் ராணுவத்தின் தற்காப்பு தயார்நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்கிறார் அதிபர் ஜெலன்ஸ்கி

உக்ரைன் ராணுவத்தின் தற்காப்பு தயார்நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்று அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி அறிவித்துள்ளார். உக்ரைன் ராணுவ வீரர்களை திசைதிருப்பவே, படைகளை குறைப்பதாக ரஷ்யா கூறுகிறது என்று ஜெலன்ஸ்கி கருத்து தெரிவித்துள்ளார். படைகளை குறைப் பதாக ரஷ்யா கூறுவதை நம்பி, தற்காப்பு தயார் நிலையை உக்ரைன் ராணுவம் தளர்த்திக் கொள்ளாது. அறிவித்தபடி படைகளை ரஷ்யா குறைக்கிறதா என்பதை உறுதி செய்த பிறகே எதுவும் கூற முடியும் என்று தெரிவித்தார்.

# சக்திவாய்ந்த ஆயுதங்களை வடகொரியா உருவாக்குமாம்



இன்னும் பலபல அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்களை உருவாக்க வடகொரியா திட் டமிட்டுள்ளது என்று வடகொரியா அதிபர் கிம் ஜோங்க் உன் அறிவித்துள்ளார். வடகொரியா கடந்த 2017ஆம் ஆண்டுக்கு பிறகு நாட்டின் மிகப்பெரிய மற்றும் நீண்ட தூரம் செல்லும் அதிநவீன ஏவுகணையை கடந்த 24ம் திகதி சோதித்தது. அமெரிக்காவின் எந்தப் பகுதியையும் தாக்கும் வல்லமை படைத்த ஹவாசோங்- 17 என்ற ஏவுகணை அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன் மேற் பார்வையில் வெற்றிகரமாக சோதிக் கப்பட்டது.

இதனை பார்வையிட்ட கிம் ஜோங், ஏவுகணை திட்டத்தில் இடம்பெற்றுள்ள விஞ் ஞானிகள், தொழில் நுட்ப நிபுணர்கள் உள்ளிட்டோரை நேரில் சந்தித்து பாராட்டி பேசும்போது, "யாரிடம் ஆயுதங்கள் வலிமையாக இருக்கின்றனவோ, அவர்களை யாரும், எந்த நாடும் தாக்க மாட் டார்கள். எந்த நாட்டின் ராணுவமும் அவர் களை தாக்க பயப்படும். நாட்டை பாதுகாப் பதன் மூலமாக மட்டுமே போரைத் தடுத்து நிறுத்த முடியும். வடகொரியா தொடர்ந்து தன்னிடம் உள்ள ஆயுதங்களை செறிவூட்டும்.

இதனால் மட்டும்தான் வடகொரியாவால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அமெரிக்காகூட எங்களைதாக்கபயப்படுகிறது என்றால் அதற்கு இதுதான் காரணம். வட கொரியா இன்னும் சக்தி வாய்ந்த ஆயுதங்களை உருவாக்கும் என்று அவர் கூறினார் என கேசிஎன்ஏ தெரிவித்துள்ளது.

# தமிழக அமைச்சரவையில் மாற்றம் புகாரையடுத்து முதல்வர் நடவடிக்கை





தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அமைச்சரவையில் இரண்டு அமைச்சர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த ராஜகண்ணப்பன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த சிவசங்கரனிடம் போக்குவரத்துத்துறை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பரிந்துரையை ஏற்று ராஜகண்ணப்பன், சிவசங்கர் ஆகியோரின் துறைகளை மாற்றுவதற்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். கடந்த மே மாதம் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாட்டு அமைச்சரவை பதவியேற்றபின்பு நடக்கும் முதல் அமைச்சரவை மாற்றம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டவர் சிவசங்கர், இவர் தற்போது அரியலூர் மாவட்ட தி.மு.க. செயலாளராகவும் உள்ளார்.

முதுகுளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரை சாதிப் பெயரைக்கூறி அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசினார் என புகார் எழுந்த நிலையில், தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஏற்கனவே தீபாவளிப் பண்டிகைக்கு போக்குவரத்துத்துறைப் பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அரசு நிறுவனத்தைத் தவிர்த்து, வெளியில் இருந்து இனிப்புகளை வாங்குவதாகவும் ராஜகண்ணப்பன் மீது குற்றச்சாட்டு எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒவ்வொரு நெல் தானியத்தையும் அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என ராகுல்காந்தி வலியுறுத்தல்

தெலுங்கானா மாநிலத்தில் விவசாயிகளிடமிருந்து அரசு நேரடியாக நெல்கொள்முதல் செய்வது தொடர்பான பிரச்சினையில் விவசாயிகளுக்கு ஆதரவாக ராகுல்காந்தி குரல் கொடுத்துள்ளார்.

இது குறித்து தெலுங்கு மொழியில் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், தெலுங்கானா விவசாயிகளால் விளைவிக்கப்பட்ட நெல்லைக் கொள்முதல் செய்யும் தார்மீகப் பொறுப்பை பா.ஜ.க.



மற்றும் டி.ஆர்.எஸ். அரசுகள் புறக்கணித்து வருகின்றன. இந்த விவகாரத்தை அரசியலாக்குவது வெட்கக்கேடானது.

விவசாயிகளைத் துன்புறுத்துவதை நிறுத்துங்கள், தெலுங்கானாவில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு தானியத்தையும் அரசு கொள்ளுமுதல் செய்ய வேண்டும்.

தெலுங்கானாவில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு நெல்லும் கொள்முதல் செய்யப்படும் வரை விவசாயிகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து போராடும், என்று ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார்.

## இல்லத்தரசிகளுக்கு 3 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்குவதற்கு கோவா அரசாங்கம் முடிவு

கோவா முதலமைச்சராக பிரமோத் சாவந்த் இரண்டாவது முறையாகப் பதவியேற்றுக் கொண்டுள்ளார். அவருடன் எட்டு எம்.எல்.ஏக்கள் அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.



இதையடுத்து புதிய அமைச்சரவையின் முதல் ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் குறித்து பின்னர் தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்ட சாவந்த், புதிய நிதியாண்டு முதலாக 3 இலவச சிலிண்டர் விநியோக திட்டத்தை செயல்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது, என தெரிவித்துள்ளார்.

கோவா சட்டசபைத் தேர்தலையொட்டி பா.ஜ.க. வெளியிட்டிருந்த தேர்தல் அறிக்கையில், ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு மூன்று எல்.பி.ஜி. சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும், என்று வாக்குறுதி அளித்திருந்தது. அதனை நிறைவேற்றும் வகையில் கோவா முதலமைச்சர் இது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து, ஊடகவியலாளர்களோடு உரையாடிய கோவா முதலமைச்சர் சாவந்த், இரும்புத் தாது சுரங்கத் தொழிலை மீண்டும் ஊக்குவிப்பது மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவது ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்போகிறேன் எனவும் தெரிவித்தார்.

## எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக விவாதிக்க கோருகின்றது காங்கிரஸ்

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முன்வைத்த நிதி மசோதா-2022 மற்றும் ஒதுக்கீடு மசோதா-2022 மீதான விவாதங்கள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா முழுவதும் பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை உயர்வு குறித்து மக்களவையில் விவாதிக்கக் கோரி காங்கிரஸ் எம்.பி., டி.என். பிரதாபன் ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார்.

இதேபோல் தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு நடத்தி வரும் அகில இந்திய வேலை நிறுத்தம் குறித்து மக்களவையில் விவாதம் செய்யக் கோரி, கேரள காங்கிரஸ் எம்.பி., கொடிகுன்னில் சுரேஷ் ஒத்திவைப்புத் தீர்மானத்தினை அளித்துள்ளார்.

இதேபோல் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து மாநிலங்களவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விதி 267 இன் கீழ் விவாதிக்க வேண்டும், என்று திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.சாந்தனு சென் விண்ணப்பம் கொடுத்துள்ளார்.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் நடத்திவரும் வேலை நிறுத்தம் குறித்து மாநிலங்களவையில் விதி 267 இன் கீழ் விவாதிப்பதற்கு காங்கிரஸ் எம்.பி. யானசக்திசிங் கோஹிலும் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.





## மத்திய அரசின் சமூக நீதித் திட்டங்கள்; விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்!

### பா.ஜ.க. எம்.பிக்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை

டெல்லியில் உள்ள அம்பேத்கர் சர்வதேச மையத்தில் இந்தியப் பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பா.ஜ.கவின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய மந்திரிகள் ராஜ்நாத்சிங், அமித்ஷா மற்றும் பாஜக எம்.பிக்கள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, பி.ஆர். அம்பேத்கரின் பிறந்தநாள் ஏப்ரல் 14ஆம் திகதி வருவதையொட்டி, ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 14 வரை சமூக நீதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாவி:கள் என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக சமூக நீதி தொடர்பான கூட்டங்கள் மற்றும் மாநாடுகளை நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார் எனவும், மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்றும் மோடி அப்போது அறிவுரை வழங்கினார் எனவும் நாடாளுமன்ற விவகாரத் துறை இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பட்டியிலின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மத்திய அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார் எனவும், ஏழை மக்களுக்கு இலவசமாக உணவுப் பொருள்களை நிவாரணக் கடைகள் மூலம் வழங்கும் பிரதான் மந்திரி கரிப் கல்யாண் யோஜனா திட்டத்தை மேலும் நீடிப்பு செய்வதென இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## டெல்லி விமான நிலையத்தில் 15 கிலோ தங்கம் சிக்கியது

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்தி வருவதை தடுக்க விமான நிலையங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் நைரோபியில் இருந்து வந்த இரண்டு கென்யா நாட்டுப் பயணிகளின் உடைமைகளை சுங்க இலாகா அதிகாரிகள் சோதனையிட்டனர்.

அப்போது அவர்கள் 15.57 கிலோ எடையுள்ள தங்கம் கடத்தி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதில் 19 தங்கக் கட்டிகளும் அடங்கும். இதன் மொத்த மதிப்பு இந்திய ரூபாவில் 7 கோடியே 50 லட்சம் ஆகும். இதுதொடர்பாக குறித்த இருவரிடமும் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில், அந்த இருவரில் ஒருவர் இதேபோன்று ஏற்கனவே சில தடவைகள் தங்கத்தை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்தமை தெரியவந்தது. மற்றொருவர் முதன்முறையாக இந்த கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமையும் கண்டறியப்பட்டது. விசாரணைகளின் முடிவில் இருவரும் கைது செய்யப்படுவார்கள் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சமீப காலத்தில் டெல்லி விமான நிலையத்தில் இந்த அளவு பெரிய பெறுமதியில் கடத்தல் தங்கம் சிக்கியுள்ள சந்தர்ப்பம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.







# மட்டு. திராய்மடுவில் வீதிகள் அபிவிருத்திப் பணி ஆரம்பம்

'எழுச்சி மிகு மாநகரம்' திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட திராய்மடு முதலாம் குறுக்கு இணைப்பு வீதி மற்றும் 3 ஆம் குறுக்கு வீதி ஆகியவற்றைத் தார் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபையின் 2 ஆம் வட்டார உறுப்பினர் ஜயாத்துரை சிறிதரனின் வேண்டுகோளிற்கிணங்க மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட நிதியின் ஊடாக இந்த வீதிகள் தார் வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

சுமார் 30 கோடி ரூபா நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி பணிகளை மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்களான த.இராஜேந்திரன், வி.பூபாலராஜா, க.ரகுநாதன், து.மதன், வாழைச்சேனை பிரதேசசபையின் உறுப்பினர் கி.சேயோன் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

பல காலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வீதிகளை அபிவிருத்தி செய்து தருகின்றமைக்கு வட்டார உறுப்பினருக்கும், மாநகர முதல்வருக்கும் அந்த வீதியில் வசிக்கும் மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

# சம்பள உயர்வு கோரி கிண்ணியாவில் திங்களன்று கவனவீர்ப்புப் போராட்டம்



(ஹஸ்பர்)

கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமையாற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் காலை 8.00 மணியளவில் சம்பள உயர்வு கோரி கவனவீர்ப்பு வைத்தியசாலை வளாகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதில் அங்கு கடமையாற்றும் சுமார் 15க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து தாருங்கள், எமது சம்பளத்தை கூட்டித் தாருங்கள் முதலான சுலோகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஒப்பந்த சேவையை வழங்கும் தனியார் நிறுவனமே இவர்களுக்கு வேலையை வழங்கியுள்ளது. இதன் திருகோணமலைக்கு பொறுப்பான அதிகாரி கொழும்புக்கு சென்றுள்ளார். அவரைத் தொடர்பு கொண்ட போது இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும், சம்பளம் அதிகரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் எனக் கூறினார்.

"எங்களுக்கு நாளொன்றுக்கு 650 ரூபா சம்பளம் தருகிறார்கள். இது போதாது. 850 ரூபா வாகக் கூட்டித் தாருங்கள். 4 முதல் 7 வருடங்கள் இங்கு வேலை செய்கின்றோம். இதை நம்பித்தான் எங்கள் பிள்ளைகள் இருக்கிறார்கள். சம்பளம் போதாது அரிசி விலை, மாவிலை, சீனி விலை. ஏன் எங்களுக்கு சம்பளத்தைக் கூட்டித் தர முடியாது?'' - எனவும் கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர்.

# மாட்டிறைச்சி விற்பனை மீள அக்கரைப்பற்றில் ஆரம்பம்

## மேயரின் வழிகாட்டலில்



பிரதேச பொதுமக்களுக்கு அசௌகரியம் இல்லாத வகையில் இறைச்சி விற்பனையில் ஈடுபடுமாறு, மாட்டிறைச்சி விற்பனையாளர்களுக்கு, அக்கரைப்பற்று மாநகர மேயர் அதாஉல்லா அகமட் ஸகி வலியுறுத்தினார். அதனையடுத்து அக்கரைப்பற்றில் மாட்டிறைச்சி விற்பனை ஆரம்பமானது.

அக்கரைப்பற்று மாநகர மேயரை, மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினர்.

மாநகர ஆணையாளர், மாநகர சபை கணக்காளர் மற்றும் மாநகர சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் பேச்சில் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில், நேற்று செவ்வாய்க்கிழமை முதல் அக்கரைப்பற்று மாநகர ஆளுகையில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் தனி இறைச்சி கிலோ 1,250 ரூபாவுக்கும், முள்ளுடன் இறைச்சி (இறைச்சி-800 கிராம், முள்ளு-200 கிராம்) கிலோ 1,100 ரூபாவுக்கும் விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி கடைகளில் கட்டாயம் டிஜிட்டல் தராசு பாவனையுடன், விலைப் பட்டியலை மக்களின் பார்வைக்கு வைத்திருக்க வேண்டுமென மாநகர மேயரால் உத்தரவிடப்பட்டது.

மேலும், புனித ரமழான் மாதத்தில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையில் சீரான முறையில் இறைச்சி விற்பனை இடம்பெற வேண்டும் என்றும் மேயர் கேட்டுக் கொண்டார்.

மேற்படி நிபந்தனைகளை மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இதனடிப்படையில், இறைச்சிக் கடைகளை திறக்க இணக்கம் காணப்பட்டது.

விலைக் குளறுபடிகள் மற்றும் பொதுமக்களுக்கு முறையான இறைச்சி விநியோக மின்மை போன்ற காரணங்களால் அக்கரைப்பற்றில் கடந்த ஒரு வார காலமாக மாட்டிறைச்சிக் கடைகள் மாநகர சபையின் உத்தரவின் பேரில் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாநகர ஆணையாளருக்கு எதிராக மேயர் தொடுத்த வழக்கில் மே 11 தீர்ப்பு!

மட்டக்களப்பு மாநகரசபையினால் மீளப்பெறப்பட்ட அதிகாரங்களை மாநகர ஆணையாளர் தொடர்ந்தும் பயன்படுத்துகின்றமை தொடர்பில் மாநகர முதல்வரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் இறுதி உத்தரவு எதிர்வரும் மே 11 ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என வழக்காளி தரப்பு சட்டத்தரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். மேற்படி வழக்கு நேற்றைய தினம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் சட்ட வரம்பை மீறிச் செயற்படுகின்றார் என்று முறையிட்டு அவர் அவ்வாறு செயற்படுவதைத் தடுப்பதற்காகதடைவிதிப்புஎழுத்தாணை கோரி மாநகர முதல்வரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்பன நேற்றைய தினம் வாதத்திற்கு எடுத்துக்கொள் ளப்பட்டன. இவ்வழக்குகளில் சட்டத்தரணி முஹைதீன் காலித்துடன் நான் முன்னிலையாகியிருந்தேன். இறுதி வாதங்களை நீதிமன்றம் செவிமடுத்த பின்னர் இறுதி உத்தரவிற்காக மே 11 ஆம் திகதி குறிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலே இன்று (செவ்வாய்) ஏதாவது இணக்கப்பாடு எட்டப்படுகின்றதா எனப் பரிசீலிப்பதாக இருந்தது. அவ்வாறான இணக்கப்பாடு இல்லாத காரணத்தினால் மனுதாரருடைய பிரதி சத்தியக்கடதாசிகளை அணைப்பதற்காக மே 04 ஆம் திகதிக்கு திகதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.



வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் வழக்கின் விடயங்கள் பற்றி நாங்கள் எதுவும் சொல்ல முடியாது. நீதிமன்றம் இரு தரப்பினருடைய வாதங்களையும் செவிமடுத்துள்ளது. சரியான உத்தரவொன்றை நீதிமன்றம் வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். - என்று தெரிவித்தார்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு
Kalaikkathir








# மெல்பேர்ன் மைதானத்தில் வார்னுக்கு இறுதி மரியாதை

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சு ஜாம்பவான் ஷேன் வார்ன், விடுமுறையை கழிக்க தாய்லாந்து சென்ற போது கடந்த நான்காம் திகதி மாரடைப்பால் காலமானார். அதைத் தொடர்ந்து அவரது உடல் தனியார் விமானத்தில் ஆஸ்திரேலியா கொண்டு செல்லப்பட்டது. அவரது குடும்பத்தினர் தனிப்பட்ட முறையில் இறுதிச் சடங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆஸ்திரேலிய அரசு சார்பில் அவருக்கு இன்று மெல்பேர்ன் மைதானத்தில் பிரமாண்டமான இறுதி மரியாதை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மைதானத்தில்தான் வார்ன் தனது 700 ஆவது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நினைவஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக முன்னதாகவே இலவசமாக ஐம்பதாயிரம் நுழைவுச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. தேவை அதிகமாக இருந்ததால் மேலும் பதினைந்தாயிரம் நுழைவுச்சீட்டுகள் ஒதுக்கப்பட்டன.

ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரபல கிரிக்கெட் வீரர்கள், வார்ன் குடும்பத்தினர் உள்பட பல்வேறு தரப்பினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வார்னேவுக்கு புகழஞ்சலி செலுத்தும் விதமாக இந்திய முன்னாள் வீரர் சச்சின் டென்டுல்கரின் வீடியோ பதிவு ஒளிபரப்பு செய்யப்பட்டது. மற்ற சுழற்பந்து வீச்சாளர்களிடம் இருந்து வார்ன் மிகவும் வித்தியாசமானவர். விக்கெட் வீழ்த்தினாலும், வீழ்த்தாவிட்டாலும் ஒவ்வொரு பந்தை வீசும் போதும், கடுமையான போட்டியாளராகவே இருப்பார். அவரை மிகவும் தவற விடுகிறேன். கடந்த ஐ.பி.எல். போட்டிக்குப் பிறகு லண்டன் சென்ற போது அவரை சந்தித்தேன். இருவரும் கோல்ப் விளையாடினோம். மிகவும் ஜாலியாக, நகைச்சுவையாக பேசினார். அவர் பக்கத்தில் இருக்கும்போது சலிப்பே இருக்காது. அதுதான் அவருடன் எனது கடைசி சந்திப்பு, என்று டென்டுல்கர் குறிப்பிட்டுள்ளார்.



## சுவிஸ் ஓபன் டென்னிஸ் தொடர் சம்பியனானார் இந்தியாவின் சிந்து

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பட்மின்ரன் போட்டியில், இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து சம்பியன் பட்டம் வென்றுள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில், தாய்லாந்தைச் சேர்ந்த பூசனனுடன் பலப்பரீட்சை நடத்திய சிந்து, 49 நிமிடங்களில் 21-16, 21-8 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த பி.வி.சிந்து, இதுவரை பூசனனுடன் 17 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். அதில் 16 முறை சிந்து வெற்றி பெற்றிருக்கிறார். 2019 இல் ஹொங்கொங் ஓபனில் மட்டுமே அவரிடம் தோல்வி அடைந்துள்ளார்.

இந்த சீசனில் இரண்டாவது சம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார் சிந்து. முன்னதாக, கடந்த ஜனவரி மாதம் லக்னோவில் நடந்த சையத் மோடி சர்வதேசத் தொடரிலும் அவர் சம்பியன் பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சன்ரைசர்ஸ் ஐதராபாத்தை வீழ்த்தி வெற்றிபெற்றது ராஜஸ்தான் ரோயல்ஸ்!



இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் நேற்றைய போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, 61 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

புனெயில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதையடுத்து, 211 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சன்ரைசரஸ் ஐதராபாத் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்துள்ளது.

## பாகிஸ்தானை வீழ்த்தியது ஆஸ்திரேலியா!




பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டிராவிஸ் ஹெட் பொறுப்புடன் விளையாடி சதமடித்தார். இதனையடுத்து 314 என்ற வெற்றியிலக்குடன் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் அணி 45.2 ஓவர் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களைப் பெற்று 88 ஓட்டங்களினால் தோல்வியடைந்துள்ளது.

# பேராதனை போதனா வைத்தியசாலை விவகாரம்; ‘இந்தியாவே உண்மை நண்பன்’ எனப் பெருமிதம்

அத்தியாவசியமருந்துப்பொருள்கள் மற்றும் வலி தெரியாமல் இருப்பதற்காகப் பயன்படுத்தும் மருந்து உள்ளடங்கலாக சத்திர சிகிச்சைகளின்போது பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு தமது வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக ஏற்கனவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் உள்ளடங்கலாக அனைத்து நோயாளர்களுக்கும் திட்டமிடப்பட்டிருந்த சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்படுகின்றன என திங்கட்கிழமை பேராதனை போதனா வைத்தியசாலையினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச்செய்தி ஊடகவியலாளர் ஒருவரால் அவரது டுவிட்டர் பக்கத்தில் பகிரப்பட்டிருந்த நிலையில், அந்தப் பதிவை மேற்கோள்காட்டி இலங்கைக்கு வருகைதந்திருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.

மருந்துப்பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டிருக்கும் செய்தி தொடர்பாகக் கவலையடைகிறேன் என அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்த அவர், இந்த விடயத்தில் இந்தியா எவ்வாறு உதவமுடியும் என்பது தொடர்பாக உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டு ஆராயுமாறு தான் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் வலியுறுத்தியிருக்கிறார் எனவும் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து சுமார் 45 நிமிடநேரத்தில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தூதரகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயம் தொடர்பில் பதிவிடப்பட்டது. இந்தவிடயம்தொடர்பில்பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் லமாவன்சவுடன் இந்திய உயர் தூதரக அதிகாரிகள் கலந்துரையாடினர் எனவும் வழமையான மற்றும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்குத் தேவைப்படும் மருந்துகள் என்னவென்பது பற்றி அவரிடம் கேட்டறிந்ததாகவும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பேராதனை போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் மீண்டும்முன்னெடுக்கப்படுகின்றன என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்தது.

எதுஎவ்வாறெனினும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக இந்தியா உன்னிப்பாக அவதானித்துவருவதாகவும், இலங்கையின் மக்கள் பிரதிநிதிகள்கூட முன்னெடுக்காத நடவடிக்கையை இந்தியா முன்னெடுத்து வருவதாகவும், சீனா இலங்கையைக் கடன்பொறிக்குள் சிக்கவைக்கும் அதேவேளை மறுபுறம் இந்தியாஉண்மையானஅக்கறையுடன் அதன் நட்புநாட்டுக்கு உதவிவருவதாகவும் டுவிட்டர் பயனாளர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு, இந்தியாவிற்கு தமது நன்றியை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரச உத்தியோகத்தர் வீட்டில் யாழ்ப்பாணத்தில் திருட்டு

## சந்தேகத்தில் இருவர் கைது

யாழ். நாவற்குழி பகுதியில்அரசஉத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் பகல் வேளையில் வீட்டை உடைத்து 7 பவுண் தங்க நகை திருடிய சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் திருட்டு சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட நகையும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ஹோட்டல் கழிவுத் தொட்டி ஒன்றில் பாணந்துறையில் பெண்ணின் சடலம்!

பாணந்துறை பின்வத்தையில்உள்ளஹோட்டல் ஒன்றின் கழிவுத் தொட்டியிலிருந்து பெண் ஒருவரின் சடலம் காணப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல்வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கழிவுத் தொட்டியில் இருந்ததாகக் கூறப்படும் சடலத்தை எடுப்பதற்கு நீதிமன்ற உத்தரவைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி, சடலம் இன்று (புதன்கிழமை) மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்புலன்ஸில் மோதுண்டு பதுளையில் பெண் காயம்

பதுளை – பசறை பிரதான வீதியின் ஐந்தாம் மைல் கல்லருகே வேவெஸ்ஸ என்ற இடத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பகல் 12 மணியளவில் அம்புலன்ஸ் வாகனத்தில்மோதுண்டபெண் ஒருவர், ஆபத்தான நிலையில், பதுளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேவெஸ்ஸ பெருந்தோட்டத்தைச் சேர்ந்த 46 வயதுடைய சந்திர மோகன் மலர் என்ற பெண்ணே, படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பசறை அரசினர் வைத்தியசாலையிலிருந்து பதுளை அரசினர் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு நோயாளியொருவரை அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றிச் செல்லும் போதே, அம்புலன்ஸ் வாகனம் விபத்திற்குள்ளாகியது.

இதையடுத்து மேற்படி விபத்து தொடர்பில், பதுளை வாகனக் குற்றத்தடுப்பு பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டனர். இந்நிலையில், படுகாயமுற்ற பெண்ணின் தவறே, விபத்துக்கு காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# துப்பாக்கி, கைக்குண்டுடன் நீர்கொழும்பில் ஒருவர் கைது

நீர்கொழும்பு பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டானை, இத்தகொடெல்ல பிரதேசத்தில் நீர்கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மினுவங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதான நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்பிறிதொருகுற்றத்தில்ஈடுபடுவதற்காக மோட்டார் சைக்கிளில் வருகைதந்த வேளையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# போக்குவரத்து சேவைகள் அனைத்தும் ஒன்றாக அரசுக்கு எதிராகப் போராட்டம்

நாட்டில் பரவலாக டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அரசாங்கம் முன்வைக்காவிட்டால், அடுத்த வாரம் போக்குவரத்து சேவை முற்றாகத் ஸ்தம்பிக்கும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பஸ்கள் மாத்திரமன்றி பாடசாலை சேவைகள், பொருள் பரிமாற்ற போக்குவரத்து சேவை உள்ளிட்ட அனைத்து சேவைகளை ஒன்றிணைத்து பாரிய போராட்டம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்கின்றோம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

# மலையகத்தில் முதல் தடவையாக நடத்தப்பட்ட உலக நாடக விழா





வரலாற்றில் முதன் முறையாக இலங்கையின் மலையக மண்ணில் உலக நாடக விழா பரிசுத்த திரித்துவக் கல்லூரி நாடக மன்றத்தால் கல்லூரியின் சௌமியமூர்த்தி கலையரங்கத்தில் நடத்தப்பட்டது.

கடந்த 27ஆம் திகதி இந்த நாடக விழா பாடசாலையின் அதிபர் ரவிச்சந்திரன் தலைமையில் நடத்தப்பட்டது.

1961 இல் சர்வதேச நாடக நிறுவனம் என்ற அமைப்பு நாடகக்கலை மற்றும் கலைஞர்கள் மீதுள்ள அக்கறையால் ‘உலகநாடக தினம்’ ஒன்றை ஆண்டுதோறும் நடத்துவதற்கு முடிவுசெய்தது.

இதன்படி 1962 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ‘தேசங்களின் அரங்கு’ என்ற தலைப்பில் உலக நாடக தினத்துக்கான முதல் செய்தியை வழங்கினார்.

இலங்கையில் உலக நாடக தினம் வருடம் தோறும் மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இந்தநிலையில் முதல் தடவையாக நுவரெலிய பரிசுத்த திரித்துவ கல்லூரியில் நடத்தப்பட்ட இந்த நாடக விழாவில் ஆசிரியர் பெ.சண்முகநாதனின் ‘வையத்தலைமை கொள்’ ஆசிரியர் திருச்செல்வனின் ‘விட்டில்’, இ.லோகநாதனின் ‘மனசாட்சி ஓடுது விதி’, ஆசிரியர் வி.சுதர்சனின் ‘பரதனும் சீதையும்’ மு.காளிதாஸின் ’நாடக கலைஞர்’ ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவை சமுதாயத்தின் சகல பக்கங்களையும் வெளிக்காட்டுவனவாக அமைந்திருந்தன. இலங்கையின் நாடக வளர்ச்சியில் மலையகத்தின் நாடக வளர்ச்சியும் பங்களிப்பும் அளப்பரியது.

அந்த நாடகத்துறை வளர்ச்சி, சமூகத்தின் கலை, கலாசார பண்பாட்டு அடையாள குறியீடுகளாகவும் இருந்தன.

அந்த வகையில் மலையக வரலாற்றில் பல நாடகங்கள் இங்கே அரங்கேற்றப்பட்டிருந்தாலும் கூட அவை துரதிர்ஷ்டவசமாக எழுத்துவடிவில் பாதுகாக்கப்படவில்லை என்ற விடயத்தைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2022இல் வெளியிடப்பெற்றது.